## மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், சாத்தூர்

அ.வ.எண். 17/2021

பெயர் – கருப்பசாமி (PW1)

நாள் – 14.08.2025

**10 ம் பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை தொடர்ச்சி–**

1) வா.சா.ஆ.1 மற்றும் வா.சா.ஆ.2 ஆகிய இரண்டு ஆவணங்களும் ஒரே சொத்தை தான் குறிக்கிறது என்பதற்கேற்ற தொடர்புடைய ஆவணங்களை நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் தாக்கல் செய்துள்ளேன். மேற்படி கூறியதற்கேற்ப தொடர்புடைய ஆவணமாக எந்த ஆவணத்தை தாக்கல் செய்துள்ளேன் என்றால் நினைவில்லை. நான் சொல்வது போல் வா.சா.ஆ.1 மற்றும் வா.சா.ஆ.2 ஆகிய இரண்டு ஆவணங்களும் ஒரே சொத்தை தான் குறிக்கிறது என்பதற்கேற்ற தொடர்புடைய ஆவணங்களை நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல.

2) சுப்பையாஏகாளி என்பவர் எப்போது இறந்தார் என்றால் 1999 ல் இறந்தார். அவர் இறப்பிற்கான இறப்பு சான்றிதழை தாக்கல் செய்துள்ளேனா என்றால் அவர் 1997 முதல் 1998 வரை என்னுடன் தான் இருந்தார். பின்னர் அவரது மக்கள் வந்து அழைத்ததால் அவர்களோடு சென்றுவிட்டார். சுப்பையாஏகாளியின் இறப்பு சான்றிதழை தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. சுப்பையாஏகாளியின் வாரிசுகள் சண்முகவேல், ஆறுமுகம், கந்தவேல், ஆழ்வார், சுப்பு ஆகியோர்கள் ஆவார். சுப்பையாஏகாளியின் வாரிசுகள் மொத்தம் 9 நபர்கள் என்று இதற்கு முன்பு நடந்த குறுக்கு விசாரணையில் சொன்னேன் என்றால் சரிதான், மொத்தம் 9 நபர்கள் இப்போது உயிரோடு இருக்கிறவர்கள் 5 நபர்கள்.

3) சுப்பையாஏகாளியின் வாரிசுதாரர்களான இறந்து போன 4 நபர்களின் பெயர் தெரியுமா என்றால் நினைவில்லை. சுப்பையாஏகாளி எனக்கு என்ன உறவு முறை என்றால் எனது பெரியப்பா ஆவார். அவரின் 9 வாரிசுகளும் எனது சகோதர சகோதரிகள் என்றால் சரிதான். சுப்பையாஏகாளியின் வாரிசுகளுக்கும், எனக்கும் இடையே சொத்து சம்மந்தமாக ஏதேனும் பிரச்சணையுள்ளதா என்றால் இல்லை. இதற்கு முன்பாக சொத்து சம்மந்தமாக ஒரு வழக்கு நான் தொடுத்துள்ளேன் என்றும் அது சம்மந்தமாக சுப்பையாஏகாளியின் வாரிசுகளை தரப்பினர்களா சேர்த்துள்ளேன் என்றால் வழக்கு

தொடுத்துள்ளேன் ஆனால் சுப்பையாஏகாளியின் வாரிசுகளை தரப்பினர்களா சேர்க்கவில்லை, மேலும் எனது சொத்திற்காக அந்த வழக்கினை தொடுத்தேன்.

4) இந்த வழக்கு சொத்தானது சுப்பையாஏகாளிக்கு பாத்தியப்பட்டதுதான் என்றால் தற்போது போட்ட வழக்கில் அவருக்கு பாத்தியப்பட்டதுதான். இந்த வழக்கில் சுப்பையாஏகாளியின் வாரிசுகளை சேர்க்கவில்லை என்றால் ஒரே ஒரு வாரிசை மட்டும் தரப்பினராக சேர்த்துள்ளேன். சுப்பையாஏகாளியின் இறப்பு சான்றிதழ் அவரின் வாரிசுகளிடம் தான் உள்ளதா என்றால் அது குறித்து எனக்கு தெரியாது. வா.சா.ஆ. 2 ஆன உயிலின் படி வழக்கு சொத்தானது என்பெயருக்கு சுப்பையாஏகாளி எழுதிக்கொடுத்த நிலையில் அவரது வாரிசுதாரர்களை சேர்த்து விளம்புகை பரிகாரம் கோரியுள்ளேனா என்றால் அது குறித்து எனக்கு தெரியாது.

5)பொதுவாக உயிலானது எழுதிக்கொடுத்தவர் இறந்த பின்னர் தான் அந்த உயிலானது ஊர்ஜிதத்திற்கு வரும் என்றால் 1997 ல் சுப்பையாஏகாளி எனக்கு உயில் எழுதி வைத்தார், 1999 ல் இறந்துவிட்டார். அவரின் இறப்பு சான்றிதழை வாங்குவதற்கு நான் முயற்சிஎடுத்தேனா என்றால் அதை நான் பெரிதுபடுத்தவில்லை (சாட்சி தனது வயது 80 என்று கூறியுள்ளார்). எனது பெரியப்பாவின் இறந்துபோன பிள்ளைகளின் பெயர்கள் எனக்கு நினைவில்லை என்றால் சரிதான். உயில் சாசனமானது சுப்பையாஏகாளி என்பவர் உண்மையிலே எழுதித்தரவில்லை என்றும், அவ்வாறு எழுதிக்கொடுத்திருந்தால் அவரது வாரிசுகளின் பெயர் குறித்தும், அவர் இறந்ததற்கான ஆவணம் குறித்தும் எனக்கு நன்கு தெரிந்திருக்கும் என்றால் சரியல்ல.

6) வா.சா.ஆ.3 ஆனது சுப்பையாஏகாளியின் பெயரில் பட்டா உள்ளதா என்றால் உள்ளது. மேற்படி கூறிய வா.சா.ஆ.3 ஆன பட்டா என் பெயருக்கு மாற்றம் செய்யப்பட்டுள்ளதா என்றால் இல்லை. உண்மையிலேயே சுப்பையாஏகாளி என் பெயருக்கு உயில் எழுதி வைத்திருந்தால் அவர் இறந்த பின்னர் உயில் ஊர்ஜிதத்திற்கு வந்து என் பெயருக்கு பட்டா பெயர் மாற்றம் செய்திருப்பேன் என்றால் சரியல்ல. நான் தாக்கல் செய்த வா.சா.ஆ.2 ஆன உயில் ஊர்ஜித்திற்கு வரவில்லை என்றால் சரியல்ல. வா.சா.ஆ.5 ஆன இரசீதுகள் வேறுசில சொத்துக்களுடன் சேர்க்கப்பட்டுள்ளதென்றால் அது குறித்து எனக்கு தெரியாது (சாட்சி தனக்கு கண்பார்வை சரியில்லாததால் ஆவணத்தை குறித்து தெளிவாக கூறமுடியவில்லை என்று கூறினார்).

7) நான் அ.வ.எண்.107/2013 என்ற வழக்கினை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான். அந்த வழக்கில் பிரதிவாதிகளாக கருப்பசாமி, ஜானகி, ராமசாமி, வேலம்மாள், கார்த்திகைசெல்வன், ஜெயக்குமார்கண்ணன் மற்றும் முனியாண்டி ஆகியோர்களை சேர்த்துள்ளேனா என்றால் சரிதான். மேற்படி அ.வ.எண்.107/2013 வழக்கில் வா.சா.ஆ.10 ல் 27.02.2008 ம் தேதி வேலம்மாள் என்பவருக்கு ராமசாமி எழுதிக்கொடுத்த கிரைய ஆவணத்தை தாக்கல் செய்துள்ளேனா என்றால் தாக்கல் செய்துள்ளேன்.

8) இந்த வழக்கில் வா.சா.ஆ.6 ஆன 455/2008 என்ற எண் கொண்ட ஆவணத்தினை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான். மேற்படி நான் கூறிய 455/2008 என்ற எண் கொண்ட ஆவணம் இருவழக்குகளிலும் போடப்பட்டுள்ள ஒரே ஆவணம் என்றால் சரிதான். மேற்படி 455/2008 என்ற எண் கொண்ட ஆவணத்தில் தான் வழக்கு சொத்து குறித்த சர்வே எண்.106/7 என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். மேற்படி கூறிய வா.சா.ஆ.6 ஆவணமானது 02.09.2013 அன்று சான்றிட்ட நகல் எடுக்கப்பட்டதென்றால் சரிதான்.

9) 2013 ஆம் ஆண்டிலேயே 455/2008 என்ற எண் கொண்ட ஆவணத்தின் விவரம் குறித்து எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. 2013 ம் ஆண்டே இது குறித்து தெரியவந்ததால் தான் அ.வ.எண்.107/2013 என்ற வழக்கில் இந்த ஆவணத்தினை வா.சா.ஆ.10 ஆக சேர்த்துள்ளேன் என்றால் சரிதான். அ.வ.எண்.107/2013 என்ற வழக்கில் வா.சா.ஆ.13 ஆக முனியாண்டிக்கு, வேலம்மாள் ராமசாமி அவர்கள் எழுதிக்கொடுத்த ஆவணத்தை தாக்கல் செய்துள்ளேனா என்றால் சரிதான். இந்த வழக்கில் வா.சா.ஆ.7 ஆவணமானது 02.09.2013 ம் தேதியில் நகல் எடுக்கப்பட்டதென்றால் சரிதான். மேற்படி 929/13 என்ற எண் கொண்ட ஆவணமும், 455/2008 என்ற எண் கொண்ட ஆவணம் குறித்து எனக்கு 2013 ம் ஆண்டே தெரியவந்ததென்றால் சரியல்ல.

10) மேற்படி கூறப்பட்ட இரண்டு ஆவணங்களையும் நான் அ.வ.எண்.107/2013 ல் ஏற்கனவே தாக்கல் செய்துள்ளதால் அது குறித்து எனக்கு நன்கு தெரியும் என்றால் தெரியாது. 929/13 என்ற எண் கொண்ட ஆவணமும், 455/2008 என்ற எண் கொண்ட ஆவணம் குறித்து எனக்கு 2013 ம் ஆண்டே தெரியும் என்றும் நான் வழக்கிற்காக பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. அ.வ.எண்.107/2013

வழக்கில் உள்ள பிரதிவாதிகளும், இந்த வழக்கில் உள்ள பிரதிவாதிகளும் ஒரே நபர்கள் என்றால் இல்லை, வேறு நபர்கள். கருப்பசாமி, ஜானகி, ராமசாமி, வேலம்மாள், கார்த்திகைசெல்வன், ஜெயக்குமார்கண்ணன் மற்றும் முனியாண்டி ஆகியோர்கள் இந்த வழக்கிலும் பிரதிவாதிகளாக உள்ளார்களா என்றால் உள்ளார்கள்.

11) எனது பிராதில் 2020ல் 10 ம் பிரதிவாதி எனது சொத்துக்குள் வந்து எனது மக்காச்சோள நிலத்தில் உழுது பிரச்சனை செய்தார்கள் என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான், அந்த பிரச்சணைக்கு பின்னர் தான் 455/2008 மற்றும் 929/13 எண் கொண்ட ஆவணங்கள் குறித்து தெரியவந்ததென்றால் சரிதான். அதற்கு பின்னர் தான் காவல் நிலையம் சென்றேன் என்றால் சரிதான். எந்த காவல் நிலையம் சென்றேன் என்றால் இருக்கண்குடி காவல் நிலையத்திற்கு சென்றேன். புகாரில் என்ன சொல்லியுள்ளேன் என்றால் 10ம் பிரதிவாதி மக்காச்சோள நிலத்தை உழுது பிரச்சணை செய்ததாக கூறி புகார் கொடுத்தேன். அதற்கு 10ம் பிரதிவாதி வழக்கு சொத்தை கிரையம் வாங்கியதாக சொன்னார். அதன் பின்னர் பந்தல்குடி பத்திர அலுவலகத்திற்கு சென்று நகல் எடுத்து இந்த வழக்கினை தாக்கல் செய்தேன்.

12) நான் 455/2008, 929/13 ஆகிய ஆவணங்களை 2013 ம் ஆண்டிலேயே நகல் எடுத்துவிட்டேன் என்றும் வழக்கிற்காக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. நான் சொன்னது போல் 17.10.2020 ம் தேதி எவ்வித சம்பவமும் நடைபெறவில்லை என்றால் சரியல்ல. அவ்வாறு ஒரு சம்பவம் நடைபெற்றிருந்தால் காவல் நிலையத்தில் மனு இரசீது கொடுக்கப்பட்டிருக்கும் என்றால் மனு இரசீது வாங்கியுள்ளேன். மேற்படி மனு இரசீதினை இந்த வழக்கில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் நினைவில்லை. மேற்படி மனு இரசீதினை இந்த வழக்கில் நான் தாக்கல் செய்துள்ளேன் என்று வழக்கிற்காக பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல.

13) வழக்கு சொத்து என் பெயருக்கு பட்டா மாறாததால் உயில் நிரூபணம் செய்யப்படவில்லை என்று எடுத்துக்கொள்ளலாம் என்றால் சரியல்ல. இந்த வழக்கானது சுப்பையாஏகாளியின்அனைத்து வாரிசுகளையும் சேர்க்காத தோஷத்தினால் பாதிப்படைகிறது என்றால் சரியல்ல. மேற்படி சொன்ன 455/2008, 929/13 ஆகிய ஆவணங்கள் குறித்து எனக்கு 2013 ம் ஆண்டிலேயே தெரியவந்தது என்பதால் இந்த

வழக்கு காலாவதி தோஷத்தினால் பாதிப்படைகின்றது என்றால் சரியல்ல.

**(10 ம்பிரதிவாதி தரப்பு வழக்கறிஞர் வேண்டுகோளுக்கிணங்க குறுக்குவிசாரணை ஒத்திவைக்கப்படுகிறது).**